## பொதுக்காலம் 28-ஆம் ஞாயிறு -

எசாயா 25:6–10a; பிலிப்பியர் 4:12–14, 19–20; மத்தேயு 22:1–14

### முன்னுரை

நம் வாழ்வின் சிறந்த நாட்கள் கடந்துபோய்விட்டனவோ என்று மனிதர்கள் நினைக்கத் தொடங்கும் தருணங்கள் உண்டு. வயதுமுதிர்வு, நோய், ஏமாற்றங்கள், தோல்விகள், தனிமை அல்லது துக்கம் ஆகியவை நம் வாழ்வு சுருங்கி மங்கிப்போகிறது என்ற எண்ணத்தை அமைதியாக மனதில் விதைத்துவிடும்.

ஆனால், இன்றைய இறைவார்த்தை அதற்கு முற்றிலும் மாறான ஒன்றை நமக்கு அறிவிக்கிறது: இறைவனோடு இருக்கும்போது, நமது எதிர்காலம் ஒருபோதும் காலியாக இருப்பதில்லை. மலை நமக்குப் பின்னால் இல்லை; அது இன்னும் நமக்கு முன்னால் தான் இருக்கிறது.

இறைவாக்கினர் எசாயா, இறைவன் அனைத்து மக்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தம் செய்யும் மாட்சியுறு காட்சியைக் கொடுக்கிறார் அது மகிழ்ச்சி, தோழமை மற்றும் முடிவில்லா வாழ்வின் விருந்து.

நற்செய்தியில் இயேசுவும் இதே உருவகத்தைப் பயன்படுத்தி, விண்ணரசை ஒரு அரசர் தம் மகனுக்கு ஏற்பாடு செய்யும் திருமண விருந்துக்கு ஒப்பிடுகிறார்.

இறைவனின் விருப்பம் நம்மைப் புறக்கணிப்பது அல்ல, மாறாகக் கொண்டாடுவதே; மனசோர்வு அல்ல, மாறாக அவரோடு இணைந்து வாழ்வதே.

ஆனால், பலர் உலகக் காரியங்களில் மூழ்கி, இறைவனின் அழைப்பிற்குப் பதிலளிக்கத் தவறிவிடுகிறார்கள் என்பதையும் நற்செய்தி நமக்கு எச்சரிக்கிறது. தொழில், கவலைகள், உடைமைகள், வழக்கமான செயல்பாடுகள் மற்றும் முடிவில்லாத கவனச்சிதறல்கள் ஆகியவை நம் இதயங்களை ஆக்கிரமித்து, வாழ்வின் ஆழமான நோக்கமான இறைவனோடும் பிறரோடும் வாழும் தோழமையை மறக்கச் செய்துவிடுகின்றன.

இன்று ஆண்டவர் மீண்டும் நம்மைத் தமது பந்திக்கு அழைக்கிறார். இந்த நற்கருணை விருந்தை

அணுகுவதற்கு முன், அவரது அழைப்பைப் புறக்கணித்த, அவரது அருளை எதிர்த்த, மற்றும் அன்பு, இரக்கம், பரிவு எனும் ஆடையை அணியத் தவறிய தருணங்களை நினைத்து மனம் வருந்துவோம்.

## மறையுரை

ஒருமுறை, வயதுமுதிர்வால் தளர்ந்து கோயிலுக்கு வரமுடியாத ஒரு முதிய பெண்மணியைச் சந்திக்க ஒருவர் சென்றிருந்தார். உரையாடலின் போது அப்பெண்மணி பெருமூச்சுடன், "ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டியதும், மலை நமக்குக் பின்னால் போய்விட்டது,

வாழ்க்கை இனி இறங்குமுகம்தான் என்பது புரிகிறது" என்றார். பிறகு, தனது ஐம்பதாவது பிறந்தநாள் புகைப்பட ஆல்பத்தைத் திறந்து காட்டினார். குடும்பத்தினரும் நண்பர்களும் சூழ்ந்திருக்க, சிரிப்பும் நடனமும் நிறைந்த அந்த நாட்களை நினைவுகூர்ந்தபோது அவரது கண்கள் ஒரு கணம் மின்னின. ஆனால், அடுத்த கணமே அந்த ஒளி மங்கியது. "இப்போது வாழ்க்கையில் எதிர்பார்ப்பதற்கு என்ன மிஞ்சியிருக்கிறது?" என்று மெதுவாகக் கேட்டார்.

அந்தக் கேள்வி நம் அனைவரின் ஆழத்திலும் ஏதோ ஒன்றைத் தொடுகிறது. நாம் இளைஞரோ, முதியவரோ, ஆரோக்கியமானவரோ, நோயுற்றவரோ, வெற்றியாளரோ அல்லது போராடுபவர

எனக்கு முன்னால் இன்னும் என்ன இருக்கிறது? உண்மையிலேயே இதற்குமேல் ஏதேனும் இருக்கிறதா?" என்று யோசிக்கும் தருணங்கள் உண்டு.

இன்றைய இறைவார்த்தை 'ஆம்!' என்று உரத்தக் குரலில் பதிலளிக்கிறது.

இறைவாக்கினர் எசாயாவின் கூற்றுப்படி, மலை நமக்குக் பின்னால் இல்லை — அது இன்னும் நமக்கு முன்னால் தான் இருக்கிறது. அந்த மலையில், இறைவனே அனைத்து மக்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தம் செய்கிறார்: "கொழுப்பான உணவுகளும், பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்து." அது வெறும் உணவு அல்ல. அது நிறைவு, மகிழ்ச்சி, தோழமை மற்றும் முடிவில்லா வாழ்வின் அடையாளம். இறைவன் மனிதகுலத்திற்கு அடக்கச் சடங்கை ஆயத்தம்

செய்யவில்லை; அவர் திருமண விருந்தை ஆயத்தம் செய்கிறார்.

இந்த விருந்தின் உருவகம் இன்றைய அனைத்து வாசகங்களிலும் ஒலிக்கிறது

திருப்பாடல் 23, ஆண்டவர் நமக்காகப் பந்தியை ஆயத்தம் செய்வதைப் பற்றிப் பேசுகிறது.

நற்செய்தியில் இயேசு, விண்ணரசை ஒரு அரசர் தம் மகனுக்கு ஏற்பாடு செய்யும் திருமண விருந்துக்கு ஒப்பிடுகிறார். விவிலியம் மீண்டும் மீண்டும் நமக்குச் சொல்கிறது: நமது இறுதி இலக்கு வறட்சி அல்ல, “தோழமை; “தனிமை அல்ல, கொண்டாட்டம்; மனசோர்வு அல்ல, பேரானந்தம்.

குடும்பங்கள் தங்களுக்குப் பிரியமானவரின் அடக்கத் திருப்பலியை ஆயத்தம் செய்யும்போது, எசாயாவின் இந்த வாசகத்தைத் தேர்ந்தெடுப்பது உண்டு; ஏனெனில் இது துக்கத்தைப் பற்றி நேரடியாகப் பேசுகிறது. மரணம் இறுதி அல்ல என்பதை இது நமக்குச் சொல்கிறது. "அவர் மரணத்தை என்றென்றும் விழுங்கிவிடுவார். ஆண்டவராகிய கடவுள் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைப்பார்." ஒரு அன்புள்ள பெற்றோர் குழந்தையைத் தேற்றுவது போல, இறைவனே தாமே வந்து நம் கண்ணீரைத் துடைப்பார் என்பது அழகான பிம்பம்!

ஆனாலும், பலர் இறைவனின் அழைப்பு ஒரு பொருட்டே இல்லை என்பது போல வாழ்கிறார்கள். இயேசுவின் உவமையில், அரசர் அழைப்பிதழ்களை அனுப்புகிறார், ஆனால் விருந்தினர்கள் மிகவும் பிஸியாக இருக்கிறார்கள். ஒருவர் தன் வயலுக்குச் செல்கிறார்; மற்றொருவர் தன் வியாபாரத்திற்குச் செல்கிறார்; சிலர் அழைப்பை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறார்கள்.

துயரம் என்னவென்றால், அந்த மனிதர்கள் கெட்டவர்கள் என்பதல்ல. அவர்களின் வயல்களும் வியாபாரமும் கெட்ட விஷயங்கள் அல்ல. துயரம் என்னவென்றால், மிகச் சிறிய விஷயங்கள் மிகப்பெரிய விஷயத்தை விட முக்கியமானதாக மாறிவிட்டன. அவர்கள் பிழைப்பை நடத்துவதில் எவ்வளவு மூழ்கிவிட்டார்கள் என்றால்,

எவ்வாறு வாழ வேண்டும் என்பதையே மறந்துவிட்டார்கள்.

அதுதான் இன்றைக்கும் நமக்கும் இருக்கும் ஆபத்து.

நாம் நம் நாட்காட்டிகளை நிரப்புகிறோம், வெற்றியைத் தேடுகிறோம், நிதியைக் கையாளுகிறோம், வாழ்க்கையைக் கட்டியெழுப்புகிறோம், கவனச்சிதறல்களில் நேரத்தை வீணடிக்கிறோம், சில சமயங்களில் இறைவன் ஒவ்வொரு நாளும் கொடுக்கும் ஆழமான அழைப்பை மறந்துவிடுகிறோம்: "விருந்துக்கு வாருங்கள். என்னோடு வாழும் தோழமைக்கு வாருங்கள். மகிழ்ச்சிக்கு வாருங்கள்."என்கிறார்

ஜெர்மனியின் கிராமப்புறங்களில் இருந்த ஒரு பழைய வழக்கத்தைப் பற்றி ஒரு குரு விவரித்தார்.

திருமணத்திற்கு முன், "விருந்தினர் அழைப்பாளர்" என்று அழைக்கப்படும் ஒரு தூதர் பண்ணை பண்ணையாகச் சென்று மக்களைத் தனிப்பட்ட முறையில் அழைப்பார். வண்ணமயமான நாடாக்களால் அலங்கரிக்கப்பட்டு, அவர் மகிழ்ச்சியோடு, "எல்லாம் ஆயத்தமாக உள்ளது. திருமண விருந்துக்கு வாருங்கள்!" என்று அறிவிப்பார்.

இயேசு நற்செய்தியில் செய்வதெல்லாம் அதைத்தான். அவர் இறைவனின் தூதர், இறை வாழ்வின் விருந்துக்கு மனிதகுலத்தை அழைக்கிறார். உலகியலான அழைப்புகளைப் போலல்லாமல், இந்த அழைப்பு சமூகத்தில் மதிப்புமிக்கவர்களுக்கோ அல்லது வெற்றியாளர்களுக்கோ மட்டுமே உரியதல்ல. முதலில் அழைக்கப்பட்டவர்கள் வர மறுத்தபோது, அரசர்: "நெடுஞ்சாலைகளுக்கும் இடுக்குகளுக்கும் போய், நீங்கள் காணும் எல்லாரையும் விருந்துக்கு அழையுங்கள்" என்கிறார்.

விண்ணரசு எதிர்பாராத மனிதர்களால் நிரம்பியுள்ளது — பாவிகள், வரி தண்டுபவர்கள், காயப்பட்டவர்கள், மறக்கப்பட்டவர்கள், ஆவியில் ஏழைகள், இரக்கத்தின் தேவையை உணர்ந்தவர்கள். சில சமயங்களில் சமயப் பழக்கவழக்கங்களுக்கு நெருக்கமாகத் தோன்றுபவர்கள் மகிழ்ச்சியை மறுக்கிறார்கள், அதே சமயம் விளிம்பு

நிலையில் நிற்பவர்கள் நன்றியோடும் வியப்போடும் விருந்தில் நுழைகிறார்கள்.

நற்செய்தியில் இதை நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம். இயேசு எப்போதும் வாழ்வுக்காக ஏங்கும் சாதாரண, உடைந்த மனிதர்களைத் தம்மைச் சுற்றிச் சேர்க்கிறார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகளார் அவர்களில் ஒருவர். அவர் சிறையிலிருந்து எழுதுகிறார், தான் வாழ்வேனா அல்லது இறப்பேனா என்பது அவருக்குத் தெரியாது. இருப்பினும் அவரது கடிதம் விடுதலையையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. அவர் ஒரு ஆச்சரியமான விஷயத்தைக் கூறுகிறார்: "வளமையிலும் வாழ அறிவேன், வறுமையிலும் வாழ அறிவேன்... எனக்கு வலுவூட்டுகிறவரின் வழியாய் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு."

பலர் கற்றுக்கொள்ளாத ஒன்றை பவுல் அடிகளார் கண்டறிந்திருந்தார்: வாழ்வின் ஆழமான பாதுகாப்பு உடமைகளிலிருந்தோ, ஆரோக்கியத்திலிருந்தோ, சூழ்நிலைகளிலிருந்தோ வருவதில்லை. அது கிறிஸ்துவில் வேரூன்றியிருப்பதிலிருந்தே வருகிறது.

ஒரு பெண்மணி, விவிலியத்தில் தனக்கு மிகவும் பிடித்த வசனம் புனித பவுல் அடிகளாரின் இந்த வரிதான் என்று கூறினார்: "எனக்கு வலுவூட்டுகிறவரின் வழியாய் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு." போராட்டங்கள் மற்றும் துன்பங்களின் போது அவர் அதைத் திரும்பத் திரும்பச் சொல்வார். கிறிஸ்து கடந்த காலத்தின் ஒரு நபர் மட்டுமல்ல, தன்னோடு பயணிக்கும் வாழும் பிரசன்னம் என்று அவர் நம்பியதால் அது அவருக்குத் தைரியத்தைக் கொடுத்தது.

பவுல் பிலிப்பியருக்கு எழுதியபோது உலகியல் ரீதியாக அவரிடம் தைரியம் மிகக் குறைவாகவே இருந்தது. அவர் ஒரு சிறைக்கூடத்தில் அமர்ந்திருந்தார். ஆயினும் அகத்தில் அவர் பல செல்வந்தர்களை விட செழுமையாக இருந்தார். கிறிஸ்துவுக்குத் தன் இதயம் உரியதாக இருந்ததால், அவரால் மனச்சோர்வு இன்றி வறுமையைத் தாங்க முடிந்தது, பற்றுதல் இன்றி வளமையைக் கையாள முடிந்தது.

அந்த விடுதலை இன்றைக்கு நமக்கு மிகவும் தேவைப்படுகிறது. நமது கலாச்சாரம் பெரும்பாலும் நமது மதிப்பு நம்மிடம் உள்ள உடைமைகளைப் பொறுத்தது என்றே கற்பிக்கிறது. "

உன்னிடம் ஏதேனும் இருந்தால், நீ யாரோ ஒருவன்." ஆனால் பவுல் அடிகளார் நினைவூட்டுகிறார்

நமது மேன்மை நம் உடைமையிலிருந்து வரவில்லை, நாம் யாருக்கு உரியவர்கள் என்பதிலிருந்தே வருகிறது.

இன்றைய நற்செய்தியில் மற்றொரு அழகான விவரம் உள்ளது. ஒரு விருந்தினர் திருமண ஆடை இன்றி வருகிறார். திருமண ஆடை என்பது அருளால் மாற்றமடைந்த வாழ்க்கையைக் குறிக்கிறது. கடவுள் எல்லாரையும் இலவசமாக அழைக்கிறார், ஆனால் அவரது அழைப்பு நம்மை மாற்ற வேண்டும். நாம் விருந்தில் கலந்துகொள்வது மட்டுமல்ல, அன்பு, இரக்கம், பரிவு மற்றும் தாராள மனப்பான்மை கொண்ட மனிதர்களாக மாறவும் அழைக்கப்படுகிறோம்.

திருமுழுக்கில், நாம் கிறிஸ்துவை ஆடையாக அணிந்துகொண்டோம். ஒவ்வொரு நாளும் மன்னிப்பதின் மூலமும், தொண்டு செய்வதன் மூலமும், ஊக்குவிப்பதன் மூலமும், வரவேற்பதன் மூலமும், அன்பு செய்வதன் மூலமும் அந்த ஆடையை மீண்டும் "அணிய" நாம் கேட்கப்படுகிறோம்.

மகிழ்ச்சியான கிறிஸ்தவம் ஒருபோதும் சுயநலமானது அல்ல. இறைவனின் விருந்தோம்பலை உண்மையாக அனுபவிப்பவர்கள் அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்குகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் ஏற்பட்ட பேரழிவு தரும் வெள்ளத்தைப் பற்றிய ஒரு குறிப்பிடத்தக்க கதை உள்ளது. ஒரு செய்தியாளர் அழிக்கப்பட்ட தன் வீட்டின் முன் நின்ற ஒரு நபரை பேட்டி கண்டார். அவருடைய வியாபாரம் போய்விட்டது. உடைமைகள் போய்விட்டன. நடைமுறையில் எல்லாமே அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. இருப்பினும் அந்த மனிதர் அமைதியாக, "எங்களிடம் எதுவும் மிஞ்சவில்லை...

ஆனால் கடவுள் எங்களை எப்படி வழிநடத்துவார் என்பதைப் பார்க்க நான் ஆவலாக இருக்கிறேன்" என்றார்.

அதுதான் விசுவாசம். துன்பத்தை மறுப்பதோ, எல்லாம் எளிது என்று நடிப்பதோ அல்ல. மாறாக, இழப்பிலும் கடவுள் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்ற நம்பிக்கை.

இன்று நாம் கொண்டாடும் நற்கருணை, எசாயா விவரிக்கும் அந்த விண்ணக விருந்தின் முன்சுவையாகும். இங்கே ஆண்டவர் நம்மைத் தமது பந்தியைச் சுற்றிச் சேர்க்கிறார். இங்கே அவர் நமக்கு அப்பத்தையும் திராட்சரசத்தையும் மட்டுமல்ல, தமது சொந்த வாழ்வையே உணவாகத் தருகிறார். இங்கே அவர் சோர்வடைந்தவர்களை வலுப்படுத்துகிறார், துயருறுவோரைத் தேற்றுகிறார், பாவிகளை மன்னிக்கிறார், கதை இன்னும் முடியவிலை என்பதை நமக்கு நினைவூட்டுகிறார்.

சில சமயங்களில் மக்கள், "நான் தனியாக ஜெபிக்க முடியும். நான் இணையத்தில் திருப்பலியைக் பார்க்க முடியும்" என்று சொல்கிறார்கள். நிச்சயமாக ஜெபம் எங்கும் முக்கியமானதுதான். ஆனால் நற்கருணையில் கிறிஸ்துவைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பதில் ஒரு தனித்துவமான விசேஷம் உள்ளது. தொலைவிலிருந்து ஒரு விருந்தைப் பார்ப்பதும், பந்தியில் அமர்வதும் ஒன்றல்ல.

இறக்கும் தருவாயிலிருந்த ஒரு முதியவர் தவறாமல் வீட்டில் நற்கருணை பெற்று வந்தார். அவர் கடுமையாக வேதனைப்பட்டார், ஆனால் ஒவ்வொரு முறையும் நற்கருணை அவருக்குக் கொண்டு வரப்பட்டபோது, அவருடைய முகம் அமைதியால் ஒளிரும். கிறிஸ்துமஸுக்குச் சற்று முன்பு அவர் குருவிடம், "இந்தக் கிறிஸ்துமஸுக்கு இயேசு என்னை வீட்டிற்கு அழைத்துச் செல்வார்" என்றார். அவர் பயத்தோடு பேசவில்லை, நம்பிக்கையோடு பேசினார். விருந்து அவருக்கு ஏற்கனவே தொடங்கிவிட்டது.

எனவே இன்று ஆண்டவர் மீண்டும் தமது அழைப்பை அனுப்புகிறார். பூரணமானவர்களுக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும் — சோர்வுற்ற, கவனச்சிதறல் அடைந்த, காயப்பட்ட, தேடுகின்ற மனிதர்களுக்கு. அழைப்பு

இன்னும் நிற்கிறது: "எல்லாம் ஆயத்தமாக உள்ளது. திருமண விருந்துக்கு வாருங்கள்."

மற்றொரு கதையோடு நான் முடிக்கிறேன்.

ஒரு ஆசிரியர் ஒருமுறை குழந்தைகள் குழுவிடம் விண்ணகம் எப்படி இருக்கும் என்று கேட்டார். ஒரு குழந்தை, "நீண்ட பயணத்திற்குப் பிறகு வீட்டுக்கு வந்து, யாரோ ஒருவர் உங்களுக்காக முழு நேரமும் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டுபிடிப்பது போல விண்ணகம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்" என்று பதிலளித்தது.

அதைத்தான் இன்றைய வாசகங்கள் பிரகடனம் செய்கின்றன. நமது அனைத்து அலைச்சல்கள், போராட்டங்கள், பயங்கள் மற்றும் கண்ணீரின் முடிவில், நம்மைக் கண்டனம் செய்யத் துடிக்கும் கோபமான நடுவரை அல்ல, மாறாக என்றுமே முடியாத விருந்துக்கு நம்மை வீட்டிற்கு வரவேற்கக் காத்திருக்கும் அன்பான தந்தையைக் காண்போம்.

அந்த நாள் வரும்போது, நாம் இறுதியாகப் புரிந்துகொள்வோம்: மலை ஒருபோதும் நமக்குக் பின்னால் இருந்ததில்லை. சிறந்தவை எப்போதும் நமக்கு முன்னால் தான் இருந்தன. ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai